டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 267 - Madurai | Online Edition

# நீடித்த நிலையான விவசாயத்திற்கான தேசிய இயக்கம்

புது தில்லி, மே 9

நிகர விதைப்பு பரப்பளவில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தை உள்ளடக்கிய இந்தியாவில் மழைநீர் சார்ந்த விவசாயம், நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தின் ஒரு மூலக்கல்லாக உள்ளது, இது மொத்த உணவு உற்பத்தியில் சுமார் 40 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. அதன் கணிசமான பங்கைக் கருத்தில் கொண்டு, இயற்கை வளங்களின் நிலையான மேலாண்மை மற்றும் நெகிழ்திறன் கொண்ட மழைநீர் விவசாய முறைகளின் அடிப்படையில் உணவு தானியங்களுக்கான வளர்ந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்திற்கான தேசிய செயல் திட்டத்தின் கீழ் 2014-15 -ம் ஆண்டில் நீடித்த நிலையான விவசாயத்திற்கான தேசிய இயக்கம் தொடங்கப்பட்டது. நீண்டகால உணவு மற்றும் வாழ்வாதார பாதுகாப்பை உறுதி செய்யும் அதே நேரத்தில் விவசாயத்தில் பருவநிலை மாறுபாட்டின் பாதகமான தாக்கங்களைத் தணிப்பதற்கான ஒரு உத்திசார் தலையீடாக இந்த இயக்கம் திட்டமிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து, 2018-19 ஆம் ஆண்டு முதல், 'பசுமைப் புரட்சி-கிருஷோந்நதி யோஜனா' திட்டத்தின் கீழ் ஒரு துணை இயக்கமாக என்.எம்.எஸ்.ஏ செயல்படுத்தப்பட்டது. 2022-23 முதல் நிறுவன மறுசீரமைப்பின் விளைவாக பிரதமரின் ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் திட்டத்தின் கீழ் இது சேர்க்கப்பட்டது, இது நிலையான, பருவநிலை-நெகிழ்திறன் விவசாய வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை பிரதிபலிக்கிறது.

நிலையான விவசாயத்திற்கான தேசிய இயக்கம் (என்.எம்.எஸ்.ஏ) இலக்கு மற்றும் ஒருங்கிணைந்த தலையீடுகளின் மூலம் பருவநிலை-நெகிழ்திறன் விவசாயத்தை ஊக்குவிக்கிறது.

நீர் பயன்பாட்டு செயல்திறனை மேம்படுத்துவதன் மூலமும், மண்ணின் வளத்தை மேம்படுத்துவதன் மூலமும், பருவநிலை நெகிழ்திறன் விவசாயத்தை வலுப்படுத்துவதன் மூலமும் நிலையான விவசாய வளர்ச்சிக்கு இது ஒரு வலுவான அடித் தளத்தை வழங்குகிறது. நுண்ணீர் பாசனத்தை ஊக்குவிக்கும் ஒரு துளி அதிக பயிர் முன்முயற்சி முக்கிய தலையீடுகளில் ஒன்றாகும்.

சீரான ஊட்டச்சத்து பயன்பாட்டை ஊக்குவிக்கும் மற்றும் நீண்ட கால மண் வளத்தை நிலைநிறுத்தும் மண் வள அட்டை திட்டத்தின் ஆதரவுடன் மண் சுகாதார மேலாண்மை கூறு இந்த முயற்சிகளை மேலும் பூர்த்தி செய்கிறது.

# இன்று கனமழை பெய்ய வாய்ப்பு!

சென்னை, மே 9

தமிழகத்தில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக, சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குமரிக்கடல் முதல் தென் மேற்கு மத்திய பிரதேசம் வரை விதர்பா, மரத்வாடா, உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. குமரிக்கடல் பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, இன்று தென் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், 11 முதல் 14ம் தேதி வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். இன்று குறிப்பாக நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியா குமரி, சிவகங்கை, ராமநாத புரம், தூத்துக்குடி, திருச்சி, நாமக்கல், கரூர் மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடு துறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இந்நிலையில், வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை மையம் அறிவித்து உள்ளது. இதன் காரணமாக மே 11ம் தேதி தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், மே 9

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் பயிற்சி 12.05.26 மற்றும் 13.05.26 ஆகிய நாட்களில் நடைபெறும்.

சிறுதானிய வகைகளான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, தினை, பனிவரகு போன்றவை மக்களால் உணவில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புறங்களில் கேழ்வரகு மட்டும் பயன்பாட்டில் உள்ளது. சிறுதானிய வகைகளில் உள்ள சத்துக்களையும் அவற்றை உபயோகித்து தயாரிக்கப்படும் கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அவையாவன

- பாரம்பரிய உணவுகள்
- பிழிதல்
- அடுமனைப் பொருட்கள்
- உடனடி தயார்நிலை உணவுகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500/- + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும். முன்பதிவிற்கு : https ://forms.gle/4AeCvBPx3NX6igEs6. பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் - வாயில் எண். 7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் - 641 003ல் நடைபெறும்.

பயிற்சியானது காலை 9 மணி முதல் மாலை 5 வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## குழந்தைகளுக்கான ஆரோக்கியமான / வயது வரம்பிற்கேற்க ஸ்நாக்ஸ் வகைகள்

நேற்றைய தொடர்ச்சி...

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சத்தான மற்றும் சுவையான ஸ்நாக்ஸ் மிகவும் அவசியம். இங்கே 1–3 வயது, 3–6 வயது மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான ஆரோக்கியமான ஸ்நாக்ஸ் குறிப்புகள் தொகுத்து அளித்து உள்ளேன்.

**1. 1–3 வயது குழந்தைகளுக்கான ஸ்நாக்ஸ் குறிப்புகள்**

இந்த வயதில் குழந்தைகள் திட உணவுகளை உண்ணப் பழகி வருவார்கள். அவர்களுக்கு எளிதில் செரிமானமாகக்கூடிய, மென்மையான மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை வழங்க வேண்டும். சிறிய துண்டுகளாக நறுக்கி, அவர்கள் எளிதாக எடுத்து உண்ணக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.



**முட்டை :** வேகவைத்த முட்டையின் மஞ்சள் கரு அல்லது முழு முட்டை யையும் மசித்து கொடுக்கலாம். புரதம் மற்றும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது.

**ரவை உப்புமா/கஞ்சி :** எளிதில் செரிமானமாகக்கூடிய ரவை உப்புமா அல்லது பால் சேர்த்து கஞ்சியாக செய்து கொடுக்கலாம்.

**அவல் :** அவலை பால் அல்லது தயிரில் ஊறவைத்து, சிறிது பழத் துண்டுகளுடன் சேர்த்து கொடுக்கலாம். இது உடனடி ஆற்றலைத் தரும்.

*நாளை 3–6 வயது குழந்தைகளுக்கான ஸ்நாக்ஸ் குறிப்புகள்*

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# நவீன வேளாண்மையில் விவசாயிகளை பாதுகாக்கும் கிசான் மித்ரா

விவசாயிகளின் உயிரை பாதுகாக்கும் வகையில் இந்திய அறிவியலாளர்களின் கிசான் மித்ரா எனும் ஒரு கருவியை வடிவமைத்து உருவாக்கி உள்ளனர். இரவு பகல் பாராமல் உழைக்கு விவசாயிகள் இரவு நேரத்தில் வயல் வெளிகளில் போகும் போது விலங்குகள் அச்சுறுத்தல் இருக்கின்றன. குறிப்பாக பாம்புத் தொல்லை அதிகம் இருக்கின்றன. இவற்றைக் கண்டறிந்து அதிலிருந்து தப்பிக்கும் வகையில் விவசாயிகளின் தோழன் எனும் கிசான் மித்ரா எனும் தடியை ( Kissan Mitra Chaadi) கருவியை உருவாக்கியுள்ளனர்.

இது ஒரு தனித்துவமான பாதுகாப்புக் கருவியான ஊன்றுக் கோல் குச்சி மாதிரி வடிவமைத்து உள்ளனர். இது 100 மீட்டர் தூரம் வரை பாம்புகள் மற்றும் அச்சமூட்டு விலங்களின் இருப்பைக் கண்டறியும் திறன் கொண்டது. மத்தியப் பிரதேசத்தின் ரைசனில் நடைபெற்ற தேசிய வேளாண் கண்காட்சிகளின் பொது மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட விவசாயிகளின் தோழன் தடியை வெளியிட்டார், மேலும் விவசாயிகளைப் பாதுகாக்க அமைப்பை எவ்வாறு பயன் படுத்துகிறது என்பதையும் அவர் விவரித்தார்.

இந்தியாவின் கிராமப்புறத் தொழிலாளர்களின் பாதுகாப்பில் உள்ள ஒரு பெரிய இடைவெளியை நிரப்பும் நோக்கில் மத்திய வேளாண் கண்காட்சியின் போது மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் 100 மீட்டர் தூரத்திலிருந்து விப் பாம்புகளைக் கண்டறியக்கூடிய உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மின்னணு கிசான் மித்ரா தடியை வேளாண் கண்காட்சியில் அறிமுகப்படுத்தினார். இந்தக் கருவி மறைந்திருக்கும் ஊர்வன வற்றைக் கண்டறிய சென்சார்களைப் பயன்படுத்துவதாகவும் பயனரை எச்சரிக்க வலுவாக அதிர்வடைவதாகவும் அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

**கிசான் மித்ரா தடி**

பார்ப்பதற்கு ஒரு சாதாரண ஊன்றுக்கோல் போலவே தோன்றினாலும் இந்தக் கருவியில் அதைச் செயல்படுத்த உதவும் ஒரு தனித்துவமான பொத்தான் இடம்பெற்றுள்ளது. விவசாயிகள் இந்தத் தடியை எடுத்துக்கொண்டு வயலுக்கு சொல்லும்போது தரையில் ஊன்றிய படி செல்ல வேண்டும். அவ்வப்போது அதில் உள்ள பொத்தானை அழுத்த வேண்டும். அப்போது அருகில் ஏதேனும் பாம்பு இருந்தால் அந்தத் தடி உடனடியாக காட்டிக் கொடுத்து விடும். இதன் மூலம் விவசாயிகள் அந்தப் பாம்பின் தாக்குதலில் இருந்த தப்பிக்க முடியும்.

ரைசென் நகரில் நடைபெற்ற மூன்று நாள் மேம்பட்ட வேளாண்மைத் திருவிழாவின் போது விவசாயச் சமூகத்திற்கு இந்தக் கருவி எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் வலியுறுத்திக் கூறினார். புல நேரங்களில் விவசாயிகளின் இரவில் வயல்களுக்கு நீர் பாய்ச்சல் செல்லும்போது பாம்புகள் கடித்துவிடும் வகையிலான பல விபத்துக்கள் நிகழ்கின்றன என்று தெரிவித்தார்.

இந்த கருவியானது அவ்வாறு அதிக்கும் சைகைகளைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு வரவிருக்கும் ஆபத்து குறித்து எச்சரிக்கை செய்கிறது என்றும் அவர் மேலும்கூறினார். வயல்களிலம் காடுகளிலும் நடைபெறும்வழக்கமான விவசாயப் பணிகளின் போது ஏற்படும் அதிகப்படியான பாம்புக்கடி சம்பங்களிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்காகவே தனிதன்மையோடு உருவாக்கப்பட்ட இந்தக் கருவியை அமைச்சர் ஒரு விவசாயியின் தோழன் என்று வர்ணித்தார்.

இந்தியாவின் பொது சுகாதாரத்திற்குப் பாம்புக்கடி ஏற்படுத்தும் தீவிர அச்சுறுத்தலுக்குப் பதிலளிக்கும் விதமாகவே கிசான் மித்ரா தடி உருவாக்கப்பட்டது. இந்தியாவில் காணப்படும் சுமார் 350 வகையான பாம்பினங்களில் வெறும் 10 சதவீதம் மட்டுமே நச்சுத்தன்மை கொண்டவை ஆகும்.

தகவல் தொகுப்பு : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.***

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நிலத்தின் விவரத்தினை உடனடியாக நில உடமை பதிவேட்டில் பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை பெற வேண்டும்

அரியலூர், மே 9

அரியலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் தங்களின் நிலத்தின் விவரத்தினை உடனடியாக நில உடமை பதிவேட்டில் பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை பெற வேண்டும் என வேளாண்மை இணை இயக்குனர் கேட்டுக் கொள்கிறார்.

அரியலூர் மாவட்டத்தில் ஆறு வட்டார பகுதியில் 195 வருவாய் கிராமங்கள், இதில் 1,20,507 நில உரிமையாளர்கள் உள்ளனர். இதில் பி எம் கிசான் பயனாளிகள் 1,11,547 உள்ளன. மாவட்டத்தில் மொத்தம் 94,929 நில உடமை பதிவு செய்யப்பட்டுள்ளது. மீதம் 25,578 நில உரிமையாளர்கள், இதுவரை நில உடமை பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. உடனடியாக பதிவு செய்யாத விவசாயிகள், தங்கள் வட்டார பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் அவர்களை சந்தித்து தங்கள் நிலத்தின் விவரத்தினை பதிவு செய்ய வேண்டும். நில உடமை பதிவேடு (FR) வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மையின் சகோதரத்துறைகள் அலுவலர்கள் மூலம் பதிவு செய்யலாம் என வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி தெரிவித்தார்.

நில உடமை பதிவேட்டில் பதிவு செய்த விவசாயிகளில் நிலங்களில் மூலம் மாவட்டத்தில் மொத்த பயிர்களின் சாகுபடி பரப்பு, உற்பத்தி கணக்கீடு செய்ய இயலும், மேலும் பூச்சி நோய் தாக்குதல் விவரம் மற்றும் பயிர் சேதம் கணக்கெடுப்பு செய்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடியும். விவசாயிகளுக்கு வழங்கப்படும் அனைத்து இடுபொருள்களும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்படும் இடுபொருள்களுக்கு விவசாயிகள் கண்டிப்பாக தங்களின் நிலத்தினை நில உடமை பதிவேட்டில் பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும். விவசாயிகள் பல்வேறு வகையில் பயன டையும் அனைத்து திட்டங்கள் திட்டங்களுக்கும் கட்டாயமாக நில உடமை பதிவேட்டில் தங்கள் நிலத்தை பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

# இயற்கை முறையில் பாரம்பரிய விவசாயத்தை மேம்படுத்துதல்



நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயம் இன்றைய சூழலில் ஒவ்வொரு ஆண்டும் விவசாய விளைநிலங்களும், விவசாய விளைபொருட்களின் உற்பத்தியும் குறைந்துக் கொண்டே வருகிறது. இதற்கு காலநிலை மாற்றம் முக்கிய காரணியாக உள்ளது. இதனால் விவசாயமும், விவசாயம் செய்யும் நடைமுறை சூழலும் மாறி வருவதால் அதிகளவில் விவசாயிகள் விவசாயத்தை விட்டுவெளியேறும் சூழல் உருவாகி வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் விவசாயிகளை தக்க வைப்பதற்காக மண்வளத்தை அழித்து வரும் தரிசு நிலங்களில் உள்ள சீமைக்கருவேல்மரங்களை அகற்றி, மண்பரிசோதனை செய்து மண்ணின் வளத்தையும், அதிலுள்ள ஊட்டச்சத்து குறைபாடு களையும் அறிந்து அதற்கேற்றவாறு பயிர் சுழற்சி முறையில் விவசாயம் செய்தல், நிலத்தில் விழும் மழை நீரை முறையாக சேமிக்க உழுதல், உயரமாகமண்கரை, சிறிய பண்ணைக் குட்டைகள், வரப்பு ஓரங்களில் உயிர் வேலிகள் அமைத்தல் போன்ற நில மேம்பாட்டு செயல்பாடுகளை விவசாயிகள், ஒத்தக் கருத்துக்களை உடைய கூட்டாளிகளின் பங்கேற்பு மற்றும் பங்களிப்புடன் VIDIYAL - UNDP - SGP ஒத்துழைப்புடன் சுற்றுச் சூழல் மற்றும் வாழ்வாதார பாதுகாப்பிற்கான தரிசு நில மேம்பாடு திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. UNDP - SGP-ன் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார பாதுகாப்பிற்கான தரிசு நில மேம்பாடு திட்டத்தின் கீழ் கடந்த ஜனவரி 2024-ம்ஆண்டு முதல் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள கட்டங்குடி மற்றும் செம்பட்டி ஆகிய இரண்டு பஞ்சாயத்துகளில் உள்ள கிராமங்களில் தேனி மாவட்டம் விடியல் நிறுவனம் செயல்படுத்திய செயல்பாடுகள் குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடி மதிப்பீடு செய்யப்பட்டது.

காலநிலை மாற்றத்தை மேம்படுத்த விவசாயத்தில் பாரம்பரிய விதைகளை பாதுகாத்து இயற்கை விவசாயத்தின் அனுபவங்களை மற்ற விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டு அதிகப்படியான விவசாயிகளை இயற்கை விவசாயத்தில் ஈடுபடுத்த வேண்டும். திட்ட செயல்பாட்டிற்கு பின்னர் திட்டத்தில் பயனடைந்த விவசாயிகளின் வருமானம் 10 சதவீதம் வரை உயர்ந்துள்ளதை விவசாயிகள் மகிழ்ச்சியுடன் பகிர்வு செய்தனர். இயற்கை விவசாயத்தை மேம்படுத்த பயோடை ஜஸ்டர் மற்றும் மண்புழு உரம் தயாரித்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கால்நடைகளுக்கான புரதசத்து நிறைந்த அசோலா தயாரிப்பிலும் விவசாயிகள் ஈடுபட்டு கால்நடை வளர்ப்பையும் மேம்படுத்தி வருகின்றனர். இந்தத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறீர்கள். மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்த செயல்பாடுகளை விவசாயிகள் தொடர்ந்து செயல்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த டாக்டர் நீலிமா, GEF மதிப்பீட்டாளர் – UNDP மற்றும் ஆசா கிரியன்த மண்டல ஒருங்கிணைப்பாளர் TERI கேட்டுக் கொண்டனர்.

பங்கேற்பாளர் கலந்துரையாடலில் பங்கேற்றவர்களை K.காமராஜ், திட்டத் தலைவர் வரவேற்க, K.வினோ பாலாஜி, திட்ட இயக்குநர் கலந்துரையாடலை ஒருங்கிணைக்க, M.சீதாலஷ்மி, திட்ட மேற்பார்வையாளர் நன்றி கூறினார்.

# விருதுநகர் பகுதியில் கேந்தி பூக்கள் கிலோ ரூ.50க்கு விற்பனை

விருதுநகர், மே.9

விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, காரியாபட்டி முதலான ஊராட்சி பகுதிகளில் மல்லி, கேந்தி பூக்கள் விவசாயம் செய்யப்படும்.

தற்போது கோடை காலம் என்பதால், பூக்கள் விவசாயம் பெரிய அளவில் இல்லை. இதனால் பூக்களின் வரத்து விருதுநகர் மார்க்கெட்டிற்கு குறைந்துள்ளது.

இந்நிலையில் விருதுநகர் அருகே அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மெட்டுக்குண்டு பகுதியில் மோட்டார் பாசனத்தில் கேந்தி பூக்கள் விவசாயம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஒரு ஏக்கரில் கேந்தி பூ விவசாயம் மேற்கொள்ள உழவு, களை எடுத்தல், உரமிடுதல், மருந்து அடித்தல், தண்ணீர் பாய்ச்சுதல் முதலானவற்றிற்கு சுமார் ரூ.20 ஆயிரம் வரை விவசாயிகள் செலவு செய்துள்ளனர்.

தற்போது மகசூலுக்கு வந்துள்ள கேந்தி பூக்கள், விருதுநகர் மார்க்கெட்டில் தரத்தைப் பொறுத்து ஒரு கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கூடுதல் விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தால் லாபம் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.




# அதிக ஆக்சிஜனை உற்பத்தி செய்யும் மரங்கள் எவை? தெரியுமா?



மரங்கள் இயற்கையின் வரங்கள், மரங்கள் இல்லாத உலகத்தை நினைத்து பார்க்க முடியுமா? மரங்கள் இல்லை என்றால் மனிதர்கள் வாழ முடியுமா? நாம் உயிர்வாழ ஆக்ஸிஜன் தேவை. அவற்றை உற்பத்தி செய்யும் இயந்திரமாக மரங்கள் உள்ளன.

**மரங்கள் ஆக்சிஜனை எப்படி உற்பத்தி செய்கின்றன?**

பொதுவாக மரங்கள் கார்பன் டை ஆக்ஸைடு ($CO_2$) மற்றும் சூரிய ஒளி பயன்படுத்தி ஆக்சிஜன் மற்றும் குளுக்கோஸை உற்பத்தி செய்கின்றன. மரங்கள் பகல் நேரத்தில் நாம் உயிர் வாழக்கூடிய ஆக்சிஜனை வெளியிடும். அதே நேரத்தில் இரவு நேரத்தில் சுவாசிப்பதற்காக சிறிதளவு ஆக்சிஜனை பயன் படுத்துகின்றன.

ஒரு முதிர்ந்த மரம் ஓராண்டுக்கு ஏறக்குறைய 260 பவுண்டு (POUND) ஆக்சிஜனை உற்பத்தி செய்யும். ஒரு பவுண்டு என்றால் 453.6 கிராம். நீங்களே கணக்கு பார்த்துக் கொள்ளுங்கள். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா மரங்களின் செயல்பாடுகளை எண்ணும் போது.

**எந்த எந்த மரங்கள் அதிக ஆக்சிஜனை உற்பத்தி செய்யும் தெரியுமா?**

அரச மரம் (PEEPAL TREE) ஆலமரம், வேம்பு, கறி வேப்பிலை, சில்வர் ஓக்.

அகன்ற இலை மரங்கள் அதனுடைய அதிக இலைபரப்பு காரணமாக சிறிய இலைகளை கொண்ட ஊசியிலை மரங்களை விட, அதிக ஆக்ஸிஜனை உற்பத்தி செய்கின்றன.

**நன்றாக வளர்ந்த மரங்கள் ஒரு நாளைக்கு எவ்வளவு ஆக்சிஜனை வெளியிடும்?**

நன்றாக வளர்ந்த மரம் ஒரு நாளைக்கு 2 முதல் 10 மனிதர்கள் சுவாசிக்க தேவையான ஆக்ஜினை உற்பத்தி செய்வதாக கண்டறியபட்ட தரவுகள் உள்ளன. இவற்றை எல்லாம் விட ஒரு இடத்தில் அதிக அளவாக மரங்கள் இருந்தால் அந்த இடத்தின் வெப்ப நிலை சுமாராக 5 டிகிரி செல்சியஸ் வரை குறைந்து குளிர்ச்சியாக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**உலக நாடுகள் அளவில் ஒரு மனிதனுக்கு எவ்வளவு மரங்கள் இருக்கின்றன? தெரியுமா?**

இதன்படி பார்த்தால் 699 மரங்கள் என்ற விகிதம் அமெரிக்காவில் உள்ளது. இதுவே பிரான்ஸ்-ல் 203, எத்தியோப்பியா வில் 143, கிரீன் லாந்தில் 4964 என்றும் உள்ளது. இதுவே இந்தியாவில் மிக மிக குறைவாக உள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

**இந்தியாவில் வெப்ப நிலை தாக்கம் குறைக்க என்ன செய்ய வேண்டும்.?**

மற்ற நாடுகளை போல அதிக அளவாக மரங்களை நட வேண்டும். மரம் வளர்ப்போம், மழை பெறுவோம் என்பது போல காலநிலை மாற்றத்திற்கு மாற்றாக மரம் நடுவோம்.

மாசற்ற காற்றை சுவாசிக்க மரங்கள் அதிகமாக நடுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# வேளாண் அறிவியல் மையத்தில் முருங்கையில் மதிப்புக்கூட்டல் பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி



தேனி, மே 9

தேனி மாவட்டம், காமாட்சி புரத்தில் அமைந்துள்ள சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் இரண்டு நாட்கள் முருங்கையில் மதிப்புக் கூட்டல் பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப் பாளர் (பொ) எம்.அருண்ராஜ் வரவேற்புரையாற்றி வேளாண் அறிவியல் மையத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். சென்டெக்ட் நிறுவனத்தின் இணை இயக்குநர் மருத்துவர் ப.சிவராம் தலைமை உரையாற்றினார். வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர் வி.கார்த்திக் பாண்டி மற்றும் சி.சபரிநாதன் வேளாண் சார்ந்த துறையில் தொழில் முனைவோராக்கல் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றி சிறப்புரையாற்றினார்கள்.

வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யாசிவசெல்வி முருங்கையை பதப்படுத்துதல், சேமிப்பு முறைகள் மற்றும் மதிப்புக்கூட்டல் பொருட்கள் தயாரித்தல் குறித்த தொழில்நுட்பங்களை வழங்கினார். மேலும் முருங்கை கீரை, முருங்கைக்காய் கூழ், முருங்கைக்காய் உலர்வித்தல், முருங்கை இலை தொக்கு, முருங்கை விதை எண்ணெய், முருங்கை காய் பவுடர், முருங்கை இலை பவுடர் லட்டு மற்றும் முருங்கை சூப் போன்ற முருங்கை சார்ந்த மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் செயல்முறை விளக்கமளிக்கபட்டன. அய்யம்பட்டி முன்னோடி விவசாயி மற்றும் தொழில்முனைவோர் குமாரப்பாண்டி ஊறுகாய் தயாரிப்பு முறைகள் மற்றும் வெற்றிக்கதையை பகிர்ந்து கொண்டார்.

மேலும் உணவு தரச்சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகள், பேக்கேஜிங், பிராண்டிங் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற விளக்கங்கள் அளிக்கபட்டன. நிறைவில் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அறிவியல் மையத்தின் அலுவலர் அனுபிரிங்கா நன்றியுரையாற்றினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கொய்யாவில் இருந்து கோடிகள் : மதிப்புகூட்டலின் வெற்றி ரகசியம்

கொய்யா என்பது இந்தியாவில் பரவலாக விளையும் மற்றும் ஊட்டச்சத்து மிகுந்த ஒரு பழமாகும். வைட்டமின் ஸீ, நார்ச்சத்து, ஆன்டி-ஆக்சிடண்ட்கள் போன்றவை அதிகமாக இருப்பதால், இது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. சமீப காலங்களில், கொய்யாவை நேரடியாக விற்பனை செய்வதைவிட, அதனை மதிப்புகூட்டு தயாரிப்புகளாக மாற்றி சந்தைப்படுத்துவது அதிக லாபகரமாக மாறியுள்ளது.



**மதிப்புகூட்டுப் பொருட்கள்**

**1. கொய்யாகூழ்**

கொய்யாகூழ் (Guava Pulp / Puree) என்பது பழுத்த கொய்யாப் பழங்களை அரைத்து, விதைகள் மற்றும் தோலை நீக்கிப் பெறப்படும் மென்மையான, சத்து நிறைந்த ஒரு உணவுப்பொருள். இது வைட்டமின்சி, நார்ச்சத்து மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்தது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது, மற்றும் ஜூஸ், ஜாம், ஐஸ்கிரீம் தயாரிப்பில் பரவலாகப் பயன்படுகிறது.

- **வகைகள் :** வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு (Pink) என இரு வகைகளில் கிடைக்கிறது.
- **பயன்கள் :** பானங்கள், குழந்தைகள் உணவு, பேஸ்ட்ரிகள் மற்றும் தயிர் போன்றவற்றுடன் சேர்த்துப் பயன்படுத்தலாம்.
- **தயாரிப்பு :** பழுத்த கொய்யாக்களைக் கழுவி, நறுக்கி, வேகவைத்து, அரைத்து, சல்லடையில் வடிகட்டிகூழ் தயாரிக்கப் படுகிறது.
- **சத்துக்கள் :** வைட்டமின்சி, நார்ச்சத்து, மெக்னீசியம் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்தது, இது ஆரோக்கியமான செரிமானத்திற்கும் சருமத்திற்கும் நல்லது.
- **பாதுகாப்பு :** பிரிட்ஜில் காற்றுப்புகாத டப்பாவில் 3-4 நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.



**2. ஜாம் மற்றும் ஜெல்லி**

ஜாம் மற்றும் ஜெல்லி (Jam & Jelly) ஆகியவை பழங்கள், சர்க்கரை மற்றும் பெக்டின் கொண்டு தயாரிக்கப்படும் பிரபலமான உணவுகள்.

**ஜாம் மற்றும் ஜெல்லி – முக்கிய வேறுபாடுகள்**



● **தயாரிப்பு முறை**

● **ஜாம் (Jam) :** பழங்களை நசுக்கி அல்லது அரைத்து, சர்க்கரையுடன் சேர்த்து வேக வைக்கப்படுகிறது. இது அடர்த்தியான, துண்டுகள் நிறைந்த அமைப்பைக் கொண்டது.

● **ஜெல்லி (Jelly) :** பழச்சாற்றை மட்டும் வடிகட்டி, சர்க்கரை மற்றும் பெக்டின் சேர்த்து வேக வைக்கப்படுகிறது. இது மென்மையான, தெளிவான மற்றும் உறுதியான அமைப்பைக் கொண்டது.

● **அமைப்பு (Texture)**

● **ஜாம் :** தடிமனாக, பழத் துண்டுகளுடன் இருக்கும்.

● ஜெல்லி : மிகவும் மென்மையான, தெளிவான, ஜெல்லி போன்றவடிவம்.

● **பயன்பாடு**

● **ஜாம் :** டோஸ்ட், பன் மற்றும் கேக்குகளில் பயன்படுத்தப் படுகிறது.

● **ஜெல்லி :** பெரும்பாலும் பிரட், பன் மற்றும் சில நேரங்களில் இனிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது.

● பெக்டின் (ஊணஉடிமிஷ்ஜ):

● ஜாம்கள் மற்றும் ஜெல்லிகள் இரண்டுமே பழங்களின் இயற்கையான பெக்டின் மூலம் உறுதி செய்யப்படுகின்றன.



● **எளிமையான வேறுபாடு**

ஜாம் = பழக்கூழ் (Pulp) + சர்க்கரை

ஜெல்லி = பழச்சாறு (Juice) + சர்க்கரை

**3. கொய்யா மிட்டாய்**

கொய்யா மிட்டாய் என்பது பழுத்த கொய்யா பழத்தின் கூழ், சர்க்கரை மற்றும் நெய் சேர்த்து தயாரிக்கப்படும் ஒரு சுவையான, மெல்லக்கூடிய இனிப்பு பண்டமாகும். இது வீடுகளிலேயே எளிதாகச் செய்யக் கூடியது, மேலும் கடைகளிலும் கிடைக்கிறது. இது வெப்ப மண்டல பழத்தின் சுவையை ஒரு இனிப்பு வடிவில் வழங்குகிறது, பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களால் விரும்பப்படும் ஒருஏக்கத்தை தூண்டும் உணவாகும்.

**வீட்டு முறை கொய்யா மிட்டாய் செய்முறை (குறைந்த அளவு)**

● **பொருட்கள் :** பழுத்த கொய்யா (500 கிராம்), சர்க்கரை (150 கிராம் – 250 கிராம்), நெய் (1–2 டேபிள் ஸ்பூன்), எலுமிச்சைசாறு (விருப்பப்பட்டால்).

● **செய்முறை :** கொய்யாவைவேகவைத்து, அரைத்து, சர்க்கரை உடன் சேர்த்து வாணலியில் கெட்டியாகும் வரை கிளறவும். நெய் சேர்த்து, நன்கு வெந்ததும், தட்டில் கொட்டி ஆற வைத்து, சதுர துண்டுகளாக வெட்டி, சர்க்கரையில் புரட்டி எடுக்கவும்.

**முக்கிய தகவல்கள்**

● **பயன்பாடு :** இனிப்பு மற்றும் புளிப்பு சுவை கொண்ட இது, ஒரு சிறந்த நொறுக்குத் தீனி (Snack).

சு **பிரபலமான பிராண்டுகள் :** பல்ஸ் கொய்யா மிட்டாய் (Pulse Guava Candy), சதானி கொய்யாமிட்டாய் (Shadani).

● **வீட்டுமுறை நன்மைகள் :** செயற்கை நிறங்கள் மற்றும் கெமிக்கல் இல்லாமல் தூயமுறையில் தயாரிக்கலாம்.

**பயனுள்ள குறிப்புகள்**

● **சர்க்கரை :** பழத்தின் இனிப்புத் தன்மைக்கு ஏற்ப சர்க்கரையை மாற்றிக் கொள்ளலாம்.

● **நிறம் :** விரும்பினால் இயற்கை உணவு நிறம் சேர்க்கலாம்.

● **சேமிப்பு :** காற்றுப்புகாத டப்பாவில் சேமித்து வைத்து நீண்ட நாட்கள் பயன்படுத்தலாம்.

**4. உலர்ந்த கொய்யா துண்டுகள்**

உலர்ந்த கொய்யா துண்டுகள் (Dehydrated Guava Slices) வைட்டமின் C, நார்ச்சத்து மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்த, நீண்டகாலம் கெடாத ஆரோக்கியமான சிற்றுண்டியாகும். இவை பற்கள் மற்றும் ஈறுகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, செரி மானத்திற்கு உதவுகின்றன. புதிய கொய்யாப் பழங்களைவிட அதிக இனிப்புச்சுவை கொண்டவை, மேலும் அமுக்கப்பட்ட ஊட்டச்சத்துக் களைக் கொண்டுள்ளன.

**உலர்ந்த கொய்யா துண்டுகளின் நன்மைகள் மற்றும் விவரங்கள்:**

● **ஊட்டச்சத்து :** வைட்டமின் C மற்றும் கால்சியம் நிறைந்துள்ளது, இது எலும்புகள் மற்றும் பற்களை வலுப்படுத்துகிறது.



● **செரிமானம் :** செரிமான மண்டலத்தை மேம்படுத்தி, குடல் இயக்கங்களை சீராக்க உதவுகிறது.

● **பயன்பாடு :** புதிய கொய்யா கிடைக்கா தகாலங்களில், இந்த உலர்ந்த துண்டுகளை ஆரோக்கியமான சிற்றுண்டியாக (ரீஜழிஉவ) பயன்படுத்தலாம்.

● **சேமிப்பு :** நீண்ட காலம் கெடாமல் இருக்கும், வழக்கமாக 6 மாதங்கள் வரை பயன்படுத்தலாம்.

● **தயாரிப்பு :** பழுத்த கொய்யாப் பழங்களை கழுவி, சிறு துண்டுகளாக நறுக்கி, உலர்த்தும் முறை (ம்ளஜுதீ ஷெழிமிஷ்லிஜு) மூலம் தயாரிக்கப்படுகிறது.

● **சிறப்பு வகை :** உலர்ந்த கொய்யா இலைகள் (Dehydrated Guava Leaves) பற்கள் மற்றும் ஈறு ஆரோக்கியத்திற்குப் பயன் படுத்தப்படுகின்றன.

**விலை மற்றும் கிடைக்கும் தன்மை :** உலர்ந்த கொய்யா துண்டுகள் சந்தையில், முக்கியமாக ஆன் லைன் ஸ்டோர்களில்,



பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றன. இதன் மொத்த விற்பனை விலை தோராயமாக ரூ,325 – 400/kg வரை உள்ளது.

**5. கொய்யா ஜூஸ் & நெக்டார்**



கொய்யா ஜூஸ் (Guava Juice) மற்றும் நெக்டார் (Nectar) ஆகியவை சத்தான, சுவையான பானங்கள். கொய்யா கூழ், நீர் மற்றும் சர்க்கரை / தேன் கலந்து இவை தயாரிக்கப்படுகின்றன. இதில் வைட்டமின் C, நார்ச்சத்து மற்றும் நீர்ச்சத்து அதிகம் இருப்பதால், நோயெதிர்ப்பு சக்தி மற்றும் உடல் எடை மேலாண்மைக்கு உதவுகின்றன. நெக்டார் என்பது ஜூஸை விட அதிக சர்க்கரை மற்றும் தடிமனான கூழ் கொண்டது.

- **ஊட்டச்சத்து நன்மைகள் :** கொய்யா ஜூஸில் வைட்டமின் C, வைட்டமின் பு மற்றும் பொட்டாசியம் நிறைந்துள்ளது. இது சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், செரிமானத்திற்கு உதவும், ரத்த அழுத்தத்தை சீராக்கவும் உதவுகிறது.

- **ஜூஸ் ஸவி நெக்டார் :**

- **ஜூஸ் :** பெரும்பாலும் பழத்திலிருந்து பிழிந்தெடுக்கப்படும் தூய நீர்ம வடிவம் (தண்ணீர் சேர்க்கப்படலாம்).
- **நெக்டார் :** கொய்யா பழக்கூழ், தண்ணீர் மற்றும் இனிப்பு கலந்து தயாரிக்கப்படும் தடிமனான, அதிக சுவை கொண்ட பானம்.
- **வீட்டு முறை தயாரிப்பு :** கொய்யா துண்டுகள், நீர், சர்க்கரை/ வெல்லம் மற்றும் சிறிது உப்பு சேர்த்து அரைத்து, வடிகட்டி குளிரூட்டி பரிமாறலாம்.
- **விற்பனை தயாரிப்புகள் :** சந்தையில் டெட்ரா பேக்குகள் (Tetra packs) மற்றும் பாட்டில்களில் 250 துயி முதல் பல லிட்டர்கள் வரை கிடைக்கின்றன.
- **பரிமாறும் முறை :** நன்றாக குளிரூட்டப்பட்ட நிலையில் அல்லது ஐஸ்கட்டிகளுடன் பரிமாறினால் சுவையாக இருக்கும். ஆரோக்கிய மான நன்மைகளைப் பெற, சர்க்கரை சேர்க்கப்படாத அல்லது இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பானங்களை தேர்ந் தெடுப்பது சிறந்தது.

**6. கொய்யா பொடி**

கொய்யா பொடி என்பது காய்ந்த கொய்யாப்பழம் அல்லது இலைகளிலிருந்து தயாரிக்கப்படும், நார்ச்சத்து, வைட்டமின் சி மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்த ஒரு சத்துமிக்க

பொடியாகும். இது உணவுகளுக்கு இயற்கையான சுவையூட்டியாகவும், ஆரோக்கிய பானங்கள், தயிர் மற்றும் ஐஸ்கிரீம்களில் சேர்க்கப்படும் ஒரு சிறந்த இயற்கைஉணவாகவும் பயன்படுகிறது.

● **ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் :** இது செரிமானத்தை மேம்படுத்துகிறது, மலச்சிக்கலைத் தடுக்கிறது மற்றும் இரத்த சர்க்கரை அளவைச் சீராக்க உதவுகிறது.

● **பயன்பாடு :** ஐஸ்கிரீம், மிட்டாய்கள், பழச்சாறுகள் மற்றும் ஜெல்லி தயாரிப்பில் சுவையூட்டியாகப் பயன்படுகிறது.

● **இயற்கை பாதுகாப்பு :** பெரும்பாலான கொய்யா பொடிகள் செயற்கை பாதுகாப்புகள், நிறங்கள் அல்லது சுவையூட்டிகள் இன்றி இயற்கையாகவே கிடைக்கின்றன.



**கொய்யா இலை பொடி (Guava Leaf Powder) :** இது பல்வலி, வாய் துர்நாற்றம் மற்றும் உடல் பலவீனத்தை குறைக்க உதவும்.

**முடிவுரை :**

கொய்யா என்பது சாதாரண பழம் மட்டுமல்ல, அது ஒரு சிறந்த வருமான வாய்ப்பாகும். மதிப்புகூட்டு தயாரிப்புகள் மூலம் அதிக லாபம் பெற முடியும். சரியான ஏற்றுமதி முறைகள் மற்றும் சந்தைப்படுத்தல் திட்டங்களை பின்பற்றினால், இந்தத் துறையில் பெரிய அளவில் முன்னேற்றம் அடைய முடியும். விவசாயிகள் மற்றும் இளம்தொழில் முனைவோர் இதனை ஒரு நல்ல வணிக வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

கட்டுரை ஆசிரியர்கள் : ***பா.கார்த்திகா, க.காவியா மற்றும் மொ.ஆபித், இளங்கலை வேளாண் மாணவர்கள், எஸ்.ஆர்.எஸ். வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, திண்டுக்கல்.***

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**





Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
ISI
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கோடைக்கால உழவின் நன்மைகள்

திருப்பூர், மே 9

திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் (மே 8ம் தேதி) வரை சுமார் 45 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. எனவே இம் மழையை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் நிலங்களில் கோடை உழவு செய்யுமாறு குண்டடம் வட்டாரம் வேளாண்மை உழவர் நலத்துறையின், வேளாண்மை உதவி இயக்குனர் பொ. பொம்முராஜு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் கோடைகால உழவின் அவசியம் மற்றும் நன்மைகளையும் எடுத்து கூறியுள்ளார்.

**மண் ஈரப்பதம் மற்றும் அரிப்பு**

உழுவது மண்ணின் கடினமான மேற்பரப்பை உடைத்து, மழைநீரை உறிஞ்சித் தக்கவைத்துக் கொள்ளும் அதன் திறனை கணிசமாக அதிகரிக்கிறது. மேலும், சரிவின் குறுக்கே உழுவது நீர் வழிந்தோடலைக் குறைத்து, அதன் மூலம் மண் அரிப்பைக் கட்டுப்படுத்துகிறது.

**மேம்பட்ட மண் அமைப்பு**

இது மண்ணின் கடினமான மேல் அடுக்கை உடைத்து, நீர் ஊடுருவல் திறனையும் ஊடுருவும் தன்மையையும் அதிகரிக் கிறது. இதனால், ஈரப்பதம் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டு, வேர்கள் எளிதாக ஊடுருவுகின்றன.

**காற்றோட்டம் மற்றும் ஊட்டச்சத்து கிடைக்கும் தன்மை**

சிறந்த காற்றோட்டம் நுண்ணுயிரிகளின் பெருக்கத்தை ஊக்கு விக்கிறது, இது கரிமப் பொருட்களின் சிதைவை விரைவுபடுத்து வதோடு, தாவரங்களுக்கு அதிக ஊட்டச்சத்துக்களைக் கிடைக்கச் செய்கிறது.

**நச்சு சிதைவு**

அதிகரித்த காற்றோட்டம், களைக்கொல்லி மற்றும் பூச்சிக் கொல்லி எச்சங்களையும், முந்தைய பயிர்களால் வெளியிடப் பட்ட தீங்கு விளைவிக்கும் அல்லேலோபதிக் சேர்மங்களையும் சிதைக்க உதவுகிறது.

பூச்சிக் கட்டுப்பாடு

மண்ணைப் புரட்டுவதால், மண்ணில் வாழும் பூச்சிகளின் முட்டைகள், புழுக்கள் மற்றும் கூட்டுப்புழுக்கள் சூரியனின் வலுவான கதிர்களுக்கு வெளிப்பட்டு, அவை இறந்து விடுகின்றன. இதனால் இரசாயன பூச்சிக்கொல்லிகளின் தேவையும் குறைகிறது.

**நோய் கட்டுப்பாடு**

கோடையின் கடும் வெப்பம் பல அபாயகரமான பாக்டீரியா வித்துகளையும் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளையும் அழிப்பதால், தாவர நோய்களின் அபாயம் குறைந்து, பூஞ்சைக் கொல்லிகளுக்கான செலவும் மிச்சமாகிறது.

**நூற்புழு மேலாண்மை**

இது தாவர ஒட்டுண்ணி நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழியாகும், இல்லையெனில் அவை கணிசமான பயிர் இழப்பை ஏற்படுத்தக்கூடும்.

**அதிகரித்த வளம்**

மழைநீரை உறிஞ்சும் மண்ணின் திறன் அதிகரிக்கும்போது, வளிமண்டல நைட்ரேட் மண்ணுக்குள் மிகவும் திறம்பட ஊடுருவி, இயற்கையாகவே மண்ணின் வளத்தை அதிகரிக்கிறது.



# விவசாயி அடையாள எண்கள் – ஒரு பார்வை

மத்திய அரசின் திட்டம் ஒன்றின் கீழ், ஆதார் எண்ணைப் போன்று விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள எண்ணைப் பெறும் செயல்முறையை குறிப்பிடுகிறது.

**நில விவர சரிபார்ப்பு**

தமிழ்நாடு அக்ரிஸ்டாக் தரவுத்தளத்தில் விவசாயிகளின் நில விவரங்களைச் சரிபார்த்துப் புதுப்பிப்பதே இதன் நோக்கமாகும்.

**தேவையான ஆவணங்கள்**

ஆதார் அட்டை (மொபைல் எண்ணுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்).

நில உரிமைச் சான்றிதழ் (சிட்டா, பட்டா, அடங்கல்).

வங்கி கணக்கு பாஸ் புக் (IFSC குறியீட்டுடன்).

பாஸ்போர்ட் அளவு புகைப்படம்.

**அடையாள அட்டையின் பயன்கள்**

வேளாண் துறை, தோட்டக்கலை மற்றும் பிற அரசுத் துறை மானியங்கள்.

PM-Kisan மற்றும் பிற மத்திய/மாநில அரசுத் திட்டங்களின் பலன்கள்.

கிசான் கிரெடிட் கார்டு (KCC) மூலம் குறைந்த வட்டியில் கடன்.

**விண்ணப்பப் பயன்பாடு**

விவசாயிகள் அரசுத் திட்டங்களை எளிதாக அணுகுவதற்கு, தங்களைப் பதிவு செய்து கொள்ளவும், தங்கள் பதிவுகள் துல்லியமாக இருப்பதை உறுதி செய்யவும், தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டும், தமிழ்நாடு அக்ரிஸ்டாக் மொபைல் செயலியைப் பயன்படுத்தி அல்லது பொது சேவை மையங்களுக்கு (CSC) நேரில் சென்று பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று, திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குனர், பொ.பொம்முராஜு தெரிவித்து உள்ளார்.

# நிலக்கடலைக்காய் ரூ.16.92 லட்சத்துக்கு ஏலம்

ஈரோடு, மே 9

ஈரோடு மாவட்டம், சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நிலக்கடலைக்காய் ஏலம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஏலத்தில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 725 மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில் ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக ரூ.65.65க்கும், அதிகபட்ச விலையாக ரூ.82.10க்கும், சராசரி விலையாக ரூ.76.80க்கும் ஏலம் போனது. மொத்தம் 23,235 கிலோ எடையுள்ள நிலக்கடலைக்காய் ரூ.16,92,307க்கு விற்பனையானது.

